இணைப்பு 01

## இலங்கை பாராளுமன்றத்தின் பொதுக்கணக்கு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119/(4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

### பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல -290

### மாவட்ட செயலகம் - பொலன்னறுவை

| பொ.க. குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய அடைவு |
|---|---|
| முதலாவது பிரிவு | |
| நிலையான சொத்து பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை. | பொதுக் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் நிலையான சொத்து தொடர்பான பதிவேடு புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி நிதியல்லாத சொத்துக்கள் கணக்கிடுவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2013.07.12 ஆம் தேதியிட்ட பொதுக் கணக்குத் திணைக்கள சுற்றறிக்கை கடிதத்தினூடாக சொத்துக்கள் வகைப்படுத்தி அதற்குரிய குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பொதுக் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் CIGAS கணினி நிரலில் நிலையான சொத்து தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சொத்துக்கள் அனைத்தும் கணக்கிடப்பட்டு, புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகின்றன. |
| கிடைக்கின்ற காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை. | மாவட்ட செயலகத்தில் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் பதிவேடு புதுப்பித்து பராமரித்து செல்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| சேதங்கள் தொடர்பான பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை. | சேதங்கள் தொடர்பான பதிவேடு புதுப்பித்து பராமரித்து செல்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை அனைத்து சேதம் மற்றும் இழப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| வாகனப் பதிவு பதிவேட்டை சரியான முறையில் புதுப்பிக்கப்படவில்லை. | மாவட்ட செயலகத்தில் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அ.நி.சு 02/2020 இன் 12.2 ஆவது பந்தியின்படி வாகனப் பதிவு செய்யும் பதிவேடு சரியான முறையில் புதுப்பித்து பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2004.05.11 தேதியிட்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 171/2004 படி அரச சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருளுக்கான கடவுச்சொல் மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாற்றப்படாமை. | சுற்றறிக்கையின்படி செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், பொதுக் கணக்கு சுற்றறிக்கை 171/2002 இன் படி அரச சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருளுக்கான கடவுச்சொல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| வாகனம் ஒன்று கழிக்கப்பட்டு 08 மாதங்களுக்கும் குறைந்த காலத்தில் அகற்றப்படவில்லை. | அ.நி.சு. 01/2020 இன் I ஆவது பிரிவின் வழிகாட்டுதல் இலக்கம் 03 இன் படி கழிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலகத்தின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>2021 வருடத்திற்கான கழிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக அகற்றும் நடவடிக்கைகள் 2022.01.20 திகதிக்குள் முடிக்கப்பட்டுள்ளன. |
| அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் பதிவுப் புத்தகம் புதுப்பித்தல் அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | அலுவலக சோதனைகளிலும் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களிலும் மாவட்ட செயலகத்தின் மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் உரிய பிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி தற்போது வரை மாவட்ட செயலகத்தின் மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களில் நிர்வாக உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு வாகனத்திற்கும் பதிவுப் புத்தகங்கள் புதுப்புத்து பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| அரச வாகன விபத்து தொடர்பாக நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் படி முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அ.நி.சு.01/2020 இன் 12.2 ஆவது பந்தியின் இணக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரச வாகன விபத்து தொடர்பான நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என குறிப்பிடுகின்றேன். |
| அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சனை பொறிக்கப்படவில்லை. | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சனை பொறிக்கப்படுகின்றது. |
| பொது வைப்பு கணக்கில் காலவதியான வைப்பு தொடர்பாக நி.பி.571 இன் படி செயற்படாமை. | நி.பி.571 இன் படி காலவதியான வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| சேகரிக்கப்பட்ட வருமானம், உடனடியாக வருமானத்திற்கு வரவு வைத்து அல்லது அவற்றை வைப்பு கணக்கில் நிறுத்தி வைத்து ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் வருமான கணக்கிற்கு வைப்பு செய்யப்படவில்லை. | மோட்டார் போக்குவரத்து அபராதம் மற்றும் நெல் கொள்வனவு செய்வதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதோடு வீட்டு வாடகை வருமானம், கூட்ட மண்டப கட்டணம் ஆகியவை நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்படுகின்றன. |
| **இரண்டாம் பகுதி** | |
| கோரப்படுகின்ற தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் ஆவணப்படுத்துதல் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை விளக்குகின்ற ஆவணம் பராமரிக்கப்படவில்லை | கோரப்படுகின்ற தகவல்கள் தொடர்பாக மற்றும் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஆவணம் ஒன்று பராமரித்து செல்ல வேண்டும் என மாவட்ட செயலகத்திற்கு மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| நிறுவனம் தமது விடய அடிப்படையில் நிலையான இலக்குகளை அடையாளம் காணவில்லை. | குறிப்பிட்ட சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதோடு மாவட்ட செயலகத்தினால் அதன் விடய அடிப்படையில் நிலையான இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது.<br>எ.கா:-<br>• நிலையான பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குவதற்கு மற்றும் அனைவருக்கும் முழுமையான பயனுள்ள தொழில்கள் மற்றும் முக்கிய கைத்தொழில்களை ஆரம்பித்தல். (சிறி வியாபார அபிவிருத்திப் பிரிவு)<br>• பட்டினியை போக்குதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விவசாய மாற்றம் (விவசாயப் பிரிவு) |

| | |
|---|---|
| | • அனைவருக்கும் சுத்தமான குடிநீர வழங்குதலை உறுதிப்படுத்துதல் மற்றும் அதன் நிலையான முகாமைத்துவம். (அரச சார்பற்ற நிறுவன மாவட்ட இணைப்புப் பிரிவு)<br>• அனைவருக்கும் சமமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு ஊக்குவித்தல். (தொழில் வழிகாட்டல் பிரிவு)<br>• ஆண், பெண் சமத்துத்தை அடைதல் மற்றும் மகளிர் மற்றும் பெண் குழந்தைகளை வலுவூட்டல். (மகளிர் விவகார பிரிவு) |
| அடையாளம் காணப்பட்ட நிலையான நோக்கங்களை அடைவதற்கு அடைய வேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்படவில்லை. | உரிய பணிகள் நடைபெற்றதா என்பதை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கான இலக்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன்.<br>எ.கா:-<br>• புதிய வியாபார கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சந்திப்பு<br>• மாவட்ட விற்பனை கண்காட்சி<br>• ஏற்றுமதி விவசாய கிராம வேலைத்திட்டத்தின் கீழ் மாங்கன்றுகள் வழங்குதல்.<br>• விவசாயிகளின் அறுவடைகளை களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சிய வசதிகளை வழங்குதல்.<br>• 500 குடும்பங்களுக்கு நீர் வசதிகள் வழங்குதல்.<br>• அங்கசம்பூரணமான புதிய வீட்டை வழங்குதல்.<br>• மாவட்ட தொழில் சந்தை<br>• தொழில்களை எதிர்பார்பார்பவர்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம்.<br>• பெண் தொழில் முனைவோரை வலுப்படுத்துதல். |
| அடையாளம் காணப்பட்ட நிலையான நோக்கங்களை நடைமுறைப்படுத்துதலின் முன்னேற்றத்தை அளவிடுதலுக்கான குறிகாட்டிகள் குறிப்பிடப்படவில்லை. | உரிய பணிகள் நடைபெற்றதா என்பதை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நிலையான நோக்கங்களை நடைமுறைப்படுத்துதலின் முன்னேற்றத்தை அளவிடுதலுக்கான குறிகாட்டிகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br>எ.கா:-<br>• புதிய வியாபார கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சந்திப்பு - ஒரே நேரத்தில் 45 பேர்களுக்கு<br>• 05 மாவட்ட விற்பனை கண்காட்சிகள் நடாத்துதல்<br>• மாவட்டம் பூராக TOMEJC வகை மாங்கன்றுகள் 1400 பகிர்ந்தளிக்கப்பட்டது.<br>• உலக வங்கி நிதியுதவியின் கீழ் மன்னம்பிட்ட, கல்லேல்ல களஞ்சியசாலைகள் இரண்டு நிறுவுதல்.<br>• அரச சார்பற்ற நிறுவனமான இஸ்லாமிக் ரிலீப் அனுசரணையில் வெலிகந்தை மதுரங்கல குடிநீர் திட்டத்தை நிறைவு செய்தல்.<br>• கௌதம தருவோ ஆர்யா அறக்கட்டளையின் அனுசரணையில் மெதிரிகிரிய ஆதரவற்ற குடும்பம் ஒன்றுக்கு புதிய வீடு கட்டுதல். |
| நிறுவனத்தில் குடிமகன்/சேவைப் பயனாளி சாசனம் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கு வழிமுறை காணப்படவில்லை. | இந்த பணிக்கு மேலதிக மாவட்ட செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவுகளும் மேற்பார்வை உத்தியோகத்தர் ஊடாக பரிந்துரைக்கப்பட்ட வழிமுறையின் கீழ் மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தினூடாக பணியாளர்களில் 50 வீதத்திற்கும் கூடியளவானோருக்கு குறைந்தது வருடத்திற்கு 12 மணித்தியாளங்களுக்கு | கடந்த காலத்தில் கோவிட் தொற்றுநோய் மற்றும் ஒதுக்கீடுகள் வரையறுத்தல், உத்தியோகத்தர்கள் வருகையை வரையறுத்தல் காரணமாக பயிற்சியளிக்க முடியாமல் போனதுடன் தற்போது குறிப்பிட்ட உத்தியோகத்தர் |

| | |
|---|---|
| குறையாத பயிற்சி வாய்ப்பு சான்றுப்படுத்தப்படவில்லை. | நியமிக்கப்பட்டு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி அரச உத்தியோகத்தர்களின் சேவைக்கு தேவையான தாபன, கணக்கியல் பயிற்சி, உற்பத்தித்திறன் பயிற்சித் திட்டம், கிராம உத்தியோகத்தர் பயிற்சி, நிதிக் கணக்காய்வு மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. |
| முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய செயற்றிறன் ஒப்பந்தம் தயாரித்து ஒப்பந்தம் செய்யப்படவில்லை. | கடந்த வருடங்களிற்குரிய அனைத்து செயற்றிறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் “அரச நிறுவனத்தினுள் மனிதவளத்தை மேம்படுத்துதல்” எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் (1) பந்தி திருத்தப்பட்டு பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018(1) மற்றும் 2023.11.30 திகதியுடைய சுற்றறிக்கையின் 3 ஆவது பந்தியில் “வருடாந்த செயற்றிறன் ஒப்பந்தம்” மேலும் கைச்சாத்திட அவசியம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு கருத்து தகுதியானதாகவோ அல்லது தகுதியற்றதாகவோ இல்லை. | 2022 டிசம்பர் 31 திகதிக்கு பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அந்த திகதியில் முடிவடையும் வருடத்திற்கு நிதி செயற்றிறன் மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் சாதாரண நிலைமையை பிரதிபலிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தெளிவான கருத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| அடையாளம் காணப்பட்ட சேவை இலக்கை அடைவதை அளவிடுவதற்கு வழிமுறை தயாரிக்கப்படவில்லை. | உதவி மாவட்ட செயலாளர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர்களை நியமித்து உரிய பணிகள் இடம்பெற்றதா என்பதை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட சேவை இலக்குகள் 85% இற்கு மேலான சதவீதத்தால் நிறைவுற்றது. |
| பகுப்பாய்வு ஆண்டில் செயற்றிறன் இலக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆண்டுக்குள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 02/2018(1) சுற்றறிக்கையின்படி 05 பிரதான சேவைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான இலக்குகள் முன்வைக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன்.<br>எ.கா:-<br>I. மாவட்ட வனசீவராசிகள் அலுவலகத்தினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்று 02 கிழமைக்குள் குழுவிற்கு முன்வைத்து ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்ற உடனே கொடுப்பனவுகள் வழங்குதல்.<br>II. சிறுநீரக, வயோதிப பயனாளர் நன்மைகள் கிடைக்க வேண்டிய குடும்ப அலகுகளை அடையாளம் கண்டு அதன்படி காத்திருப்பு பட்டியலுக்குட்படுத்தி ஒரு மாதத்தினுள் கொடுப்பனவு செய்தல்.<br>III. சரியான வழிமுறையினுள் தகுதி பெற்றவர்களுக்கு வருடத்திற்கு இரண்டு தடவைகள் வெடிபொருள் அனுமதிப்பத்திரம் வழங்குதல்.<br>IV. விவசாயிகளுக்கு மிக கூடுதலான விலையின் கீழ் நெல் கொள்வனவு செய்தல். |
| அடையாளம் காணப்பட்ட செயற்றிறன் குறியீட்டை அடைதல் 24% இற்கும் குறைவானதாக காணப்பட்டது. | உதவி மாவட்ட செயலாளரை நியமித்து உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் அடையாளம் காணப்பட்ட செயற்றிறன் குறியீடு அதிக சதவிகிதத்தை நெருங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன். |

| | |
|---|---|
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | கடந்த காலங்களில் காணப்பட்ட கோவிட் தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து செயற்படுவதற்கு சிரமமாக இருந்தாலும் நிகழ்நிலை முறையின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படிருந்தது.<br>அதன்படி 2022, 2023 வருடங்களுக்குரிய நிதி முகாமைத்தும், நிதிக் கணக்காய்வு, கிராம உத்தியோகத்தர் ஆகிய பயிற்சி திட்டங்கள் நடாத்தி கூடிய முன்னேற்றத்தை கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. | அரசாங்கக் கணக்குக் குழுவினால் இன்னும் தீர்க்கப்படாத 03 பிரச்சினைகள் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் அதில் 02 தற்போது முழுவதுமாக தீர்க்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வீட்டு வாடகை நிலுவை தொடர்பான பிரச்சினைக்குரிய ரூ. 12800.00 மாதாந்த தவணைக் கட்டனமாக செலுத்தப்படுகின்றது. 2024 டிசம்பர் மாதத்திற்குள் அந்த பிரச்சினையும் தீர்க்கப்படும். |
| அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கை முன்வைக்கப்படவில்லை | 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சட்ட மூலத்தின் திருத்தப்பட்ட 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்ட மூலத்தின்படி பகுப்பாய்வு ஆண்டுக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைப்படுத்த வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைகள் முன்வைத்துள்ளனர். |

..........................................

மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்

மாவட்ட செயலகம்

Sujantha Ekanayake
District Secretary / Government Agent
Polonnaruwa

..........................................

பிரதான கணக்காளர்

மாவட்ட செயலகம்

M. Kalaignanasundaram
Chief Accountant
For Polonnaruwa District Secretary

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்